# புதுக்கோட்டை மாவட்ட சட்டப்பணிகள் ஆணையம்

## செய்திக்குறிப்பு

### சட்ட தன்னார்வலர்கள் பணிக்கு விண்ணப்பிக்க அழைப்பு

புதுக்கோட்டை மாவட்ட சட்டப்பணிகள் ஆணையம் மற்றும் வட்ட சட்ட பணிகள் குழு, அறந்தாங்கி, ஆலங்குடி, ஆவுடையார்கோவில், கந்தர்வகோட்டை, இலுப்பூர், கறம்பக்குடி, கீரனூர், மணமேல்குடி, பொன்னமராவதி, திருமயம், விராலிமலை ஆகிய அலுவலகங்களில் சட்ட தன்னார்வலராக பணிபுரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தை சார்ந்த கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது,

- ✓ ஆசிரியர்கள் மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்.
- ✓ ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள்.
- ✓ MSW பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்.
- ✓ அங்கன்வாடி பணியாளர்கள், மருத்துவர்கள்.
- ✓ மாணவர்கள் மற்றும் சட்டக்கல்லூரி மாணவர்கள் (வழக்கறிஞராக பதிவு செய்யும் வரை).
- ✓ அரசியல் அமைப்பு சாராத, பொதுச்சேவை புரியும் தொண்டு நிறுவனங்களை சார்ந்த உறுப்பனர்கள்.
- ✓ மகளீர் சுயஉதவி குழுக்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட / பாதிக்கப்பட்ட பெண்களுக்காக பணிபுரியும் தொண்டு நிறுவனங்களை சார்ந்த உறுப்பினர்கள்.
- ✓ நீண்ட கால தண்டனை பெற்று சிறையில் இருந்துவரும், நன்நடத்தை கொண்ட, கல்வி பயின்ற சிறைவாசிகள்.

விண்ணப்ப படிவம் மற்றும் முழு விபரம் https://districts.ecourts.gov.in/pudukkottai என்ற இணையதளத்தில் "Notification" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. விருப்பமுள்ள தகுதிவாய்ந்த நபர்கள் மேற்படி இணையதள விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, அதனை முறையாக பூர்த்தி செய்து வரும் **27.05.2024-ம் தேதி மாலை 5.00** மணிக்குள் **"தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணையம், புதுக்கோட்டை"** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு இதன் மூலம் கோரப்படுகிறது. இறுதி நாளுக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தகுதியான விண்ணப்பங்களின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் வரும் - **29.05.2024 தேதி 10.00 மணிக்கு** புதுக்கோட்டை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்குள் இருக்கும் சமரச தீர்வு மைய அலுவலகத்தில் (ADR Building) நேர்முகத்தேர்வின் மூலம் தேர்வு செய்யப்படவுள்ளனர் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

குறிப்பு: *மேற்காணும் பணிக்கு* ***சம்பளம், தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி ஏதும் வழங்கப்படாது,*** *சேவை மனப்பான்மை உள்ளவராக இருத்தல் வேண்டும், சேவைக்கேற்ற மதிப்பூதியம் வழங்கப்படும்.*

**ஓம்/-. K.பூரண ஜெய ஆனந்த்**
தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணையம்,
புதுக்கோட்டை.

இடம்: புதுக்கோட்டை.
தேதி: 13.05.2024.

# மாவட்ட சட்டப்பணிகள் ஆணையம், புதுக்கோட்டை

## சட்ட தன்னார்வலர்கள் விண்ணப்ப படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரா் பெயர்<br>Name (In Capital Letters) | | விண்ணப்பதாரா் சமீபத்திய புகைப்படம் (சுயசான்றொப்பம் இடவும்) |
| 2. | தகப்பனாா் / கணவா் பெயா்<br>Father's / Husband's Name | | |
| 3. | வசிப்பிட விலாசம் /<br>Residential Address | | |
| 4. | வயது / Age | | |
| 5. | பாலினம் / Sex | ஆண் ☐ / பெண் ☐ / திருநங்கை ☐<br>(Male / Female / Transgender ) | |
| 6. | கல்வி மற்றும் தொழிற் தகுதிகள்<br>Educational & Technical Qualifications | | |
| 7. | சமூக சேவையில் அனுபவம்<br>Experience in Social Service. | | |
| 8. | தொழில் / Occupation | | |
| 9. | கைபேசி எண் /<br>Mobile Number | | |
| 10. | மின்னஞ்சல் முகவரி /<br>E-Mail Address | | |
| 11. | எப்பகுதியில் சட்ட தன்னாா்வலராக பணி செய்ய விரும்புகிறீா்கள்:<br><br>Place opted to serve as Para Legal Volunteer.<br><br>பொருத்தமான இடத்தில் [ ✓ ] குறியீடு செய்யவும் /<br><br>Tick Appropriate Column [ ✓ ] | Pudukkottai / புதுக்கோட்டை | |
| | | Alangudi / ஆலங்குடி | |
| | | Aranthangi / அறந்தாங்கி | |
| | | Avudaiyarkovil / ஆவுடையார்கோவில் | |
| | | Gandharvakottai / கந்தர்வகோட்டை | |
| | | Illupur / இலுப்பூர் | |
| | | Karambakkudi / கறம்பக்குடி | |
| | | Keeranur / கீரனூர் | |
| | | Manamelgudi / மணமேல்குடி | |
| | | Ponnamaravathy / பொன்னமராவதி | |
| | | Thirumayam / திருமயம் | |
| | | Viralimalai / விராலிமலை | |

| | | |
|---|---|---|
| 12. | தாங்கள் ஏற்கனவே சட்டம் சார்ந்த தன்னார்வலராக பணிபுரிந்திருந்தால் விவரம் மற்றும் செய்த பணிகள் குறித்து தெரிவிக்கவும்.<br><br>Have you already been served as P.L.V.? If yes, Provide the details of service rendered. | |
| 13. | குற்ற வழக்குகளில் ஏதேனும் நீவிர் சம்பந்தப்பட்டவராக இருந்தால், அதன் பற்றிய விவரம் குறிப்பிடவும்<br><br>Have you been involved in any Criminal activities ? if yes, furnish the details. | |

இடம் / Place:
நாள் / Date :

விண்ணப்பதாரரின் கையெழுத்து /
Signature of the Applicant

✓ மேற்கண்ட விபரங்கள் யாவும் உண்மையென உளமாற உறுதி கூறுகிறேன்.

✓ சட்டம் சார்ந்த தன்னார்வலர் பணி நிரந்தரபணி அல்ல, தற்காலிகமானது மற்றும் அதற்கு ஊதியம் எதுவும் கிடையாது. சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டுமே அளிக்கப்படும்.

✓ பணி நிரந்தரம் செய்ய உரிமை எதுவும் நான் கோரமுடியாது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை நான் படித்து அறிந்துகொண்டேன்.

இடம் / Place:
நாள் / Date :

விண்ணப்பதாரரின் கையெழுத்து /
Signature of the Applicant